நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஈரோடு

முன்னிலை : திரு.S.பிரின்ஸ் சாமுவேல்ராஜ், B.A., L.L.M.,
நீதித்துறை நடுவர்,
நீதித்துறை நடுவர் எண்.1, ஈரோடு

2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 03-ம் நாள் புதன்கிழமை
(2055 திருவள்ளுவராண்டு, சோபகிருது வருடம், மார்கழி மாதம் 18-ம் நாள்)

சுருக்கு விசாரணை வழக்கு எண். 1458/2023

CNR.No.TNED040158552023

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
ஈரோடு தாலுக்கா காவல் நிலையம், ஈரோடு,
குற்ற எண். 108/2023 … குற்றமுறையீட்டாளர்

/ எதிர்/

கார்த்திகேயன், த/பெ. மோகன். … குற்றஞ்சாட்டப்பட்டவர்

| வரிசை எண் | விளக்கம் | விவரங்கள் | |
|---|---|---|---|
| 1. | சம்பவம் நடந்த நாள் | 08.04.2023 | |
| 2. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 09.04.2023 | |
| 3. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | கைது செய்யப் பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | 13.04.2023 | 13.04.2023 |
| 4. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 24.08.2023 | |
| 5. | குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 05.10.2023 | |

<table>
<tr><td>6.</td><td>கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப் பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">1)C.M.P.No. 16700/2023-ல் கு.வி.மு.ச பிரிவு 320-ன் கீழான மனு கடந்த 16.10.2023-ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது.<br><br>2)C.M.P.No. 20768/2023-ல் கு.வி.மு.ச பிரிவு 311-ன் கீழான மனு கடந்த 26.12.2023-ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td rowspan="3">7.</td><td rowspan="3">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>16.10.2023</td><td>16.10.2023</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>26.12.2023</td><td>26.12.2023</td></tr>
<tr><td>8.</td><td>எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள்</td><td colspan="3">27.12.2023</td></tr>
<tr><td rowspan="2">9.</td><td rowspan="2">எதிரிகள் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள்</td><td>பிடியாணை வழங்கப்பட்ட நாள்</td><td colspan="2">பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள்</td></tr>
<tr><td>-</td><td colspan="2">-</td></tr>
<tr><td>10.</td><td>வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள்</td><td colspan="3">27.12.2023</td></tr>
<tr><td>11.</td><td>தீர்ப்பு பகரப்பட்ட நாள்</td><td colspan="3">03.01.2024</td></tr>
</table>

இவ்வழக்கில் அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், குற்றஞ்சாட்டப்பட்ட எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.N.முருகேஷ் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இதுநாள் வரை பரிசீலனையிலிருந்து வந்து இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும்,

## தீர்ப்புரை

இந்த வழக்கு குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 173 (2) இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் படிக்கு எழுந்த வழக்காகும்.

<u>1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :</u>

கடந்த 08.04.2023-ம் தேதி, மாலை 17.30 மணிக்கு, மூலப்பாளையம் டாலர்ஸ் காலனியில் உள்ள ஸ்ரீபாலாஜி டிரான்ஸ்போர்ட் கம்பெனி லாரி ஒர்க்ஷாப் பக்கம் உள்ள தனது மருந்து குடோனுக்கு வாதி மகேந்திரன் சென்ற போது எதிரி கார்த்திகேயன் வாதி மகேந்திரனை பார்த்து "டேய் தாயோழி" அடுத்தவன் பெண்டாட்டியுடன் குடும்பம் நடத்தற நாய் நீ சொத்தா டா வேணும் என்று அருவருக்க தக்க கெட்டவார்த்தைகளால் திட்டி வாதிக்கு பொது இடத்தில் அவமரியாதையை ஏற்படுத்தியும் மற்றும் வாதி மகேந்திரனை கையாலும், காலாலும் அடித்து உதைத்து கீழே தள்ளி விட்டு வாதிக்கு வலது பக்க முன்தலையில் சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாலும் எதிரி மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 323-ன் படி தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளதாக ஈரோடு தாலூக்கா காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்ற இறுதி அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களையும் குற்ற அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களையும் பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரிக்கு எதிராக புலன் கொள்ளக்கூடிய குற்றங்கள் விசாரணைக்கு எடுக்க முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், எதிரிக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 323-ன் படியான குற்றங்களையும் விசாரணைக்கு எடுத்து குற்ற விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 190 (1) (b) -ன் படி உத்தரவிடப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. குற்றஞ்சாட்டப்பட்டவர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழக்கில் உள்ள ஆவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 207 குற்ற விசாரணை நடைமுறை சட்டத்தின் படி இலவசமாக வழங்கப்பட்டன.

4. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இந்திய தண்டனைச்சட்டம் பிரிவுகள் 294(b), 323-

வின் கீழான குற்றங்களைப் பற்றி குற்ற விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 251-ன் படி விளக்கிக்கூறி வினவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றச் சாட்டினை மறுத்த காரணத்தினால் அரசு தரப்பில் சாட்சிகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் இல்லை.

<u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:</u>

6. அரசு தரப்பு சாட்சிகளில் அ.சா.1 திரு.மகேந்திரன் இவ்வழக்கின் புகார்தாரரும் சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியும் ஆவார். அ.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் எதிரி தனது அண்ணன் ஆவார் எனவும், சுமார் 3 மாதங்களுக்கு முன்பு தனக்கும் தனது அண்ணனுக்கும் வாக்குவாதம் வந்ததாகவும், ஆகவே தனக்கு மயக்கம் வந்துவிட்டதாகவும், மருத்துவமனை அழைத்து சென்றதாகவும், மருத்துவமனையில் போலீசார் தன்னிடம் கையெழுத்து பெற்றதாகவும், அதில் என்ன எழுதியுள்ளது என்பது தனக்கு தெரியாது என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் தன்னுடையது தான் என்று கூறி பிறழ்சாட்சியாக மாறியுள்ளார். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. அ.சா.2 திரு. ராஜா உதவி ஆய்வாளர் ஆவார்.அ.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் கடந்த 08.04.2023-ம் தேதி 22.55 மணிக்கு ஈரோடு அரசு மருத்துவமனையிலிருந்து வந்த மகேந்திரன் என்பவரின் அசால்ட் இன்டிமேசனை உதவி ஆய்வாளர் பழனிசாமிபெற்று ஈரோடு அரசு மருத்துவமனைச் சென்று மகேந்திரன் என்பவரைப் பார்த்தாகவும், அவர் மயக்கநிலையில் இருந்ததால் வாக்குமூலம் பெற முடியாமல் நிலையம் வந்து வாக்குமூலம் பதிவு செய்து 09.04.2023 ம் தேதி மகேந்திரன் என்பவரைப் பார்த்து அவர் கொடுத்த வாக்குமூலத்தைப் பெற்று, 19.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண் . 108/2023

சட்டப்பிரிவு 294(b), 323 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதாகவும், உதவி ஆய்வாளர் சபியுல்லா அன்றைய தினமே 21.15 மணிக்கு சாட்சிகள் அப்துல் அப்பாஸ், செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளதாகவும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், மகேந்திரனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பழனிச்சாமி என்பவரை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்றிதழ் மற்றும் வாக்குமூலம் பெற்றுள்ளதாகவும், இத்துடன் அவர் புலன்விசாரணையை முடித்து எதிரி மீது 294(b), 323 இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார். அ.சா.2 மூலமாக அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டது.

8. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள பகுதியை குவிமுச பிரிவு 313 (1) (பி)-ன் கீழ் விளக்கி வினவ குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சாட்சிகளின் சாட்சியங்களை பொய் சாட்சி என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பும் கேட்கப்பட்டது.

9. தீர்வுக்குரிய பிரச்சனை :

இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட எதிரி மீதான இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294(b), 323-ன் படியான குற்றங்கள் அரசு தரப்பில் எந்தவொரு சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும்.

10. குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள சம்பவம் குறித்து கடந்த 08.04.2023-ம் தேதி அ.சா. 1 ன் அசால்ட் இன்டிமேசனை பெற்று சிகிச்சையிலிருந்த அ.சா.1 மகேந்திரன் என்பவரை விசாரித்து அ.சா.ஆ.3 புகார் வாக்குமூலம் பெற்று நிலைய குற்ற எண் 108/23 இதச 294(b), 323 பிரிவுகளின் கீழ் அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும்,

அ.சா.ஆ.5 பார்வைமகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரிவரைபடம் தயார் செய்தும், அ.சா.1 மகேந்திரனுக்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.7 மகேந்திரனின் விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் பெற்று தனது புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது தெரியவருகிறது.

11. அ.சா.1 இவ்வழக்கின் புகார்தாரரும் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சியும் ஆவார். அ.சா.2 சிறப்பு உதவி ஆய்வாளர் ஆவார்.

12. எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்ததில், இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 294(b) கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

பிரிவு 294(b)

ஆபாசச் செயல்களும் பாடங்களும்

மற்றவர்களுக்குச் தொந்தரவாக இருக்கும்படி

(அ) .....

(ஆ) ஒரு பொதுவிடத்தில் அல்லது அதற்கு அருகில் ஆபாசபாடல்கள் கதைப்பாடல் அல்லது சொற்கள் எதையும் பாடுகிற, ஒப்பிக்கிற அல்லது பொழிகிற எவராயிலும் மூன்று மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றோ, அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

மேற்படி பிரிவின் படிக்கு ஒரு பொது இடத்தில் அல்லது அதற்கு அருகில் எதிரி தகாத வார்த்தையால் அ.சா.1-யை திட்டினார் என்பதையும், அதனால் அ.சா.1-க்கு அவமானத்தை எதிரி ஏற்படுத்தினார் என்பதையும் அரசுதரப்பில் நிரூபிக்க வேண்டும்.

13. இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 323 கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

பிரிவு 323

தன்னிச்சையாகக் காயம் விளைவிப்பதற்கான தண்டனை

பிரிவு 334 ஆவது பிரிவில் கை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் தவிர தன்னிச்சையாகக் காயம் விளைவிக்கும் எவரொருவரும் ஓர் ஆண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை வகைகள் இரண்டின் ஒன்றோ அல்லது ஆயிரம் ரூபாய் வரை அபாதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

மேற்படி பிரிவின் படிக்கு எதிரி அ.சா.1-க்கு தன்னிச்சையாக காயம் விளைவித்ததை நிரூபித்திருக்க வேண்டும்.

14. எதிரிக்கு எதிரான இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 294 (b), 323-ன் கீழான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்ததில், இவ்வழக்கில் அ.சா.1 திரு.மகேந்திரன், புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட நபர் ஆவார். ஆனால் அ.சா.1 சம்பவத்தைக் குறித்து கூறாமல், சுமார் 3 மாதங்களுக்கு முன்பு தனக்கும் தனது அண்ணனுக்கும் வாக்குவாதம் வந்ததாகவும், ஆகவே தனக்கு மயக்கம் வந்துவிட்டதாகவும், மருத்துவமனை அழைத்து சென்றதாகவும், மருத்துவமனையில் போலீசார் தன்னிடம் கையெழுத்து பெற்றதாகவும், அதில் என்ன எழுதியுள்ளது என்பது தனக்கு தெரியாது என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் தன்னுடையது தான் என்று கூறி பிறழ்சாட்சியாக மாறியுள்ளார்.

15. அ.சா.2 காவல்துறை சாட்சி ஆவார். அ.சா.2 தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் புலன் விசாரணையை பற்றி குறிப்பிட்டுள்ளார். அ.சா.2 மூலமாக அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.2 மட்டுமே எதிரிக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.2-ன் சாட்சியத்தை உறுதியூட்ட எவ்வித சாட்சியமும் இல்லை. இந்நிலையில், இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.1 பிறழ்சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் சொல்வது போல ஒரு குற்ற சம்பவம் நடந்ததா என்ற சந்தேகம் எழுகிறது.

16. அரசு தரப்பில் பாதிக்கப்பட்டதாக கூறும், அ.சா.1 பிறழ்சாட்சியாக உள்ள நிலையில், சம்பவம் நடந்தா என்பதே சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வகையில் உள்ளதாலும், உறுதியூட்டப்படாத அ.சா.2-ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரிக்கு எதிராக இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 294 (b), 323-ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபித்தாக கூறமுடியாது என முடிவு செய்து, எதிரி சந்தேகத்தின் பலனை பெற உரிமையுடையவர் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

17. இறுதியாக, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இந்திய தண்டனைச் சட்டப்பிரிவுகள் 294(b), 323-ன் படியான குற்றங்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்று முடிவு செய்து எதிரியை மேற்கண்ட குற்றத்திலிருந்து குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 255(1)-ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

18. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் அது குறித்து உத்தரவு ஏதுமில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, மீண்டும் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 03-ம் நாளான இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S PRINCE SAMUVEL RAJ
Digitally signed by S PRINCE SAMUVEL RAJ
Date: 2024.01.03 18:05:44 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஈரோடு.

<u>இணைப்பு</u>
<u>அரசு தரப்பு சாட்சிகள் :</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.மகேந்திரன் | மகேந்திரன் |
| 2. | அ.சா.2 | திரு.ராஜா | சிறப்பு உதவி ஆய்வாளர் |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | 16.10.2023 | புகாரில் உள்ள கையெழுத்து |
| 2. | அ.சா.ஆ.2 | 08.04.2023 | இன்டிமேசன் |
| 3. | அ.சா.ஆ.3 | 09.04.2023 | புகார் வாக்குமூலம் |
| 4. | அ.சா.ஆ.4 | 09.04.2023 | முதல்தகவல் அறிக்கை |
| 5. | அ.சா.ஆ.5 | 09.04.2023 | பார்வை மகஜர் |
| 6. | அ.சா.ஆ.6 | 09.04.2023 | மாதிரி வரைபடம் |
| 7. | அ.சா.ஆ.7 | 13.04.2023 | மகேந்திரனின்  காயச்சான்றிதழ் |

எதிரிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :  ஏதுமில்லை.

அரசு தரப்பு சான்று பொருட்கள் ஏதுமில்லை.

குறிப்பு :

1. எதிரிகள் பிணையில் உள்ளார்கள்.
2. சாட்சிகள் யாரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. தீர்ப்புரை குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

S PRINCE SAMUVEL RAJ

Digitally signed by S PRINCE SAMUVEL RAJ
Date: 2024.01.03 18:05:53 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஈரோடு.